**சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமஸ்த லங்கா சாசனாரக்சக நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் தொடர்பாக உரித்தாகின்ற கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது உரிய கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) புதுபுத் மாபிய உபகார வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்காக பன்னிரெண்டு பேருக்கும் மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக ஒரு நபருக்கும் ஆக மதகுருமார்கள் பதின்மூன்று பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,300,000 கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவினம் ரூபா 100,000 மற்றும் பொறுப்புக்கள் ரூபா 1,300,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதியம் ரூபா 1,200,000 | வீடமைப்புத் திட்டத்தில் முதலாவது கட்டமாக வழங்கப்பட்ட ரூபா ஒரு இலட்சம் தொகையில் வேலைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் புத்தசாசனத்தில் இருக்கின்ற புத்த பிக்குகளின் பெயரில் உறுதிப்படுத்திய பின்னர் இரண்டாவது தவணைப் பணம் கோரப்படுமாயின் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் இரண்டாவது தவணை கட்டாயமாக செலுத்த வேண்டிய கடப்பாடு ஒன்றாக இல்லாமையினால் கணக்குகளில் செலுத்த வேண்டியதாக | இரண்டு தவணைப் பணங்களில் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்குரிய நிதியேற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட விற்பனைகளுக்கான கடதாசிகளில் இருந்து தயாரிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைக் கொடி மற்றும் ஸ்டிக்கர் இருப்புக்கள் ரூபா 711,300 பெறுமதியான 2371 துணிக் கொடிகளின் அளவை நிதிக்கூற்றுக்களில் இருப்புக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த துணிக் கொடிகளின் பெறுமதியான ரூபா 90,300 ஆண்டின் வருமானத்தில் உள்ளடக்குவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அதற்குச் சமமான அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பதிவாளர் மதகுருவுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் மிகுதிக் கொடிகளை மீண்டும் கையேற்காமையினால் குறித்துரைத்த பெறுமதி ஒன்றை குறிப்பிடுவதற்கு தவறியதுடன் நிதிக்கூற்றுக்களில் பெறுமதியைக் காண்பிப்பதற்கு முடியாதிருந்தமையால் நிறைவேற்று சபையுடன் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வருவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பலவருட காலங்கள் மேற்கூறப்பட்ட நன்கொடையாளர்களின் நிதி உதவியின் அடிப்படையில் அச்சிடப்பட்டு முன்னாள் பதிவாளர் மதகுருவினால் கையேற்கப்பட்ட இந்த கொடிகள் மீளாய்வாண்டின் போது அச்சிடப்பட்ட கொடி அல்லாதிருந்தமையால் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | உரிய கொடிகளின் இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல (கூட்டிணைத்தல்) சட்டத்தில் 07(1)(அ) உபபிரிவு | அங்கத்தவரினால் செலுத்த வேண்டிய கட்டணம் தொடர்பாக உரித்தான விதிகள் தயாரித்து அங்கத்தவர் கட்டணம் மற்றும் பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் நிதியத்திற்காக குறித்துரைத்த வருமான வழிகள் காணப்படவில்லை. | சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணம் அறவிடப்படவில்லை என அறியத்தருகின்றோம். | விதிகள் தயாரித்து அங்கத்துவ கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல விதிக் கோவையின் 7.1 ஆம் பந்தி | வருடம் ஒன்றிற்கு பொதுச் சபைக் கூட்டம் 04 மற்றும் நிறைவேற்றுக் கூட்டங்கள் 12 நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 03 பொதுக் கூட்டங்களும், 02 நிறைவேற்று சபைக் | நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் கீழ் கூட்டங்களை நடாத்துவதற்கு குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளாமல் அத்தியாவசிய | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட்டங்களும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | விடங்களின் போது இணைய வழி ஊடாக கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. தற்போது பொதுவான பிரகாரம் உரிய கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,346,577 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,907,854 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,438,723 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீட்டு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஊ) உப பிரிவின் பிரகாரம் தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை, நிதியத்தின் இலக்குகளை அமுல்படுத்துவதற்கு பாதகமாக தாக்கமளித்த விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக புதிய நிறைவேற்று சபைக்கு மீண்டும் ஒரு தடவை அறிவிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | நிதியத்தின் இலக்குகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான போதியளவான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமிப்பதற்கும் சேவையில் ஈடுபடுத்துதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 15 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நன்கொடைகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நன்கொடைப் பெறுவனவுகளில் எந்தவொரு வேலைத் திட்டமும் காணப்படாமையின் காரணமாக அந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிலும் இதே நிலையில் காணப்பட்டது. | தற்போது கிடைக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட செலவினங்கள் செய்யப்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிகழ்சித் திட்டங்களை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிகழ்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பௌத்த மதகுருமார்களின் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு நலன்புரிகளை வழங்கும் நோக்கில் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5 மில்லியன் முதலீடு ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் கீழ் பேணிச் செல்லப்படுகின்ற புதுபுத் மாபிய உபகார நம்பிக்கை பொறுப்பு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் முதலீடு செய்யப்பட்ட தொகையில் இருந்து கிடைக்கின்ற வட்டியில் நிறைவேற்ற முடியுமான நோக்கங்களை இனங்கண்டு அது தொடர்பாக எழுத்துமூலம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கின்ற வட்டித் தொகை மிகவும் சிறியதாக இருந்தமையால் ஏனைய நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பை ஸ்தாபித்த நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 2 மில்லியன் நிதி உதவி வழங்குவதற்கும், ரூபா 3 மில்லியனைப் பயன்படுத்தி 02 இலட்சம் வீதம் புதுபுத் மாபிய உபகார வீடமைப்பு திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 925,000 மற்றும் ரூபா 500,000 ஆனமையால் அதன் செயல் முன்னேற்றம் முறையே 46.25 சதவீதம் மற்றும் 16.67 சதவீதம் ஆக இருந்தது. | தற்போது கிடைக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட செலவினங்கள் செய்யப்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிகழ்சித் திட்டங்களை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

**3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்குச் சொந்தமான நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 57,183,750 ஆகவும், அதற்குரிய மீளாய்வாண்டின் வட்டி ரூபா 10,265,513 ஆகவும் இருந்த போதும் 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா | எதிர்காலத்தில் நிறைவேற்று சபைக் கூட்டத்தின் போதும் மற்றும் பொதுச் சபைக் கூட்டத்தின் போதும் இது தொடர்பாக கலந்துரையாடி நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிதியத்தை | நிதியத்தை செயற்திறனாக ஈடுபடுத்தி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சாசனாரக்சக மண்டல (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்திற்குரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,600,173 மாத்திரம் ஆகும். நிதியத்தை செயற்திறனாக ஈடுபடுத்தி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தாமல் முதலீடு செய்யப்பட்டிருந்தமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திறனாக ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதும் நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க கிடைக்கின்ற கோரிக்கையின் அடிப்டையில் மருத்துவ நிதி உதவி, புதுபுத் வீடமைப்பு நிதி உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(ஊ) மற்றும் 40 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வு இலக்குகள் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமை ஒன்று இருக்கின்றமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலேனும் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய நிறைவேற்று சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் மூலம் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பௌத்த அலுவல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடப்படும் என குறிப்பிடுகின்றோம். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(1)(ஈ) இன் பிரகாரம் எந்த ஒரு நிதியாண்டுக்காவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு ஒன்று இன்றி நிதியத்தின் கீழ் எந்த ஒரு செலவினமும் செய்ய முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் பாதீடு, தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு, தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு 2022.12.01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திடம் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பாதீடு இன்றி நிதியத்தின் கீழ் எந்த ஒரு செலவினமும் செய்ய முடியாதிருந்தமையால் பாதீட்டை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |